






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 15 23.04.2026



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:




*New AA branch at Hosur Pathankota*

# முத்துக்கள்

## வேதம்

ஆராத்யனான எம்பெருமானையும் அவனது ஆராதனத்தையும் உணர்த்துவதால் வேதம் எனப்பெயர் பெற்றது. அது தர்மார்த்த காம மோக்ஷமாகிய சதுர்வித புருஷார்த்தங்களையும் தரவல்லது. வேதத்தைத் தொடங்குவதன் முன்னம், ஹரி: ஓம் என்று கூறவேண்டும். ஓம் இத்யேகாக்ஷரம் ப்ரஹ்ம என்பதால் ப்ரணவம் ப்ரஹ்மத்தை உணர்த்தும் என்றுணரலாம். அந்த ப்ரஹ்மம் எது? என்ற வினாவெழ ஹரி: என்று விடை கூறலாகின்றது. இதனால் ஹரி: ஓமென்பது ப்ரஹ்மம் என்று உணரலாகின்றது. 'வேதாக்ஷராணி யாவந்தி தாவந்தி ஹரி நாமாநி' என்பதால் வேதத்தில் காணும் ஒவ்வொரு எழுத்தும் எம்பெருமானுடைய திருநாமங்கள். அவைகளை ஓதுவதால் பகவான் உகப்பன். அவன் உகப்பு ஏற்படின் பெற இயலாதவை உண்டோ; ய: படேத் ச்ருணுயாந் நித்யம் யச்சாபி பரிகீர்த்தயேத் ஐ நாசுபம் ப்ராப்நுயாத்சிஞ்சித்ஸோ முத்ரேஹசமானவ: என்றவாறு வேதத்தைப் பாராயணம் செய்பவன். அதைக் கேட்பவன், பாராயணம் செய்யச் செய்பவன் அனைவரும் இம்மையிலும் மறுமையிலும் நலமடைவர். துன்பம் அவர்களை அணுகாது. மாந்தர்கள் அவர்கள் விரும்பிய பயனைப்பெறுவர். வேதங்களின் பொருளும் பயனும் கருதி, "வேதாச்சாஸ்த்ரம் பரம் நாஸ்தி நதைவதம் கேசவாத் பரம்" வேதத்தைவிடச் சீரிய சாஸ்த்ரம் ஒன்றும் இல்லை. வேத வேத்யனான ஸ்ரீமந்நாராயணனை விடச் சீரிய பர தேவதையில்லை என்று உரைக்கப்பட்டது.

******************************************************************

## திருப்பாவை

ரிஷிகள் தவம் போன்ற தங்கள் முயற்சியாலே எம்பெருமானை அடைய முற்படுவர். ஆழ்வார்கள் எம்பெருமானால் மயர்வறமதி நலம் அருளப் பெற்றதால் ஸம்ஸார ஸாகரத்திலிருந்து எழுந்தவர். பெரியாழ்வார் பொங்கிவரும் பக்தியால் எம்பெருமானுக்கு யாதொரு தீங்கும் வராமலிருக்க பல்லாண்டு பாடியருளினார். ஆண்டாள் பிறந்தது முதல் இயல்பாகவே எம்பெருமானிடம் பக்தி பூண்டவளாய் எம்பெருமானை எழுப்பி தங்குறையை

விண்ணப்பஞ் செய்தாள். ஆழ்வார்கள் புருஷர்கள். தங்களைப் பெண்ணாகப் பாவித்து எம்பெருமானை அனுபவித்தனர். ஆண்டாள் பெண்ணதலால் எம்பெருமானிடம் பாவனையின்றி இயல்பாக அன்பு செலுத்தி அவனையே அடைந்தாள். எனவே ஆழ்வார்களைக் காட்டிலும் ஆண்டாளுக்கு ஏற்றம். அவள் அருளிச் செய்த திருப்பாவைக்கும் ஏற்றம்.

*********************************************************************

**ஸ்ரீ வைஷ்ணமும் ஸ்ரீ பேரருளாளனும்**

உலகங்களைப் படைப்பவன் பிரமன். அவன் நாராயணனிடமிருந்து தோன்றியவன். இவனிடமிருந்து தோன்றியவன் சங்கரன். "நான்முகனை நாராயணன் படைத்தான். நான்முகனும் தான் முகனாய் சங்கரனைத் தான் படைத்தான்" என்று கூறுவர். "நாராயணாத் இந்த்ரோ ஜாயதே. நாராயணாத் ருத்ரோ ஜாயதே. நாராயணாத் த்வாதச ஆதித்யா: ருத்ரர் வசவ: ஸர்வாணிச சந்தாகும்ஸி, நாராயணா தேவ ஸமுத்பத்யந்தே, நாராயணாத் ப்ரவர்த்தந்தே நாராயணே ப்ரலியந்தே." என்ற உபநிஷத், பிரமன், ருத்ரன், பன்னிரெண்டாதித்யர்கள் ஏகாதச-ருத்ரர்கள் போன்ற அனைவரும், நாராயணனிடமிருந்தே தோன்றுகின்றனர். நாராயணனாலேயே ரக்ஷிக்கப்படுகின்றனர். ப்ரளய காலத்தில் அழிக்கவும் படுகின்றனர் என்று கூறுகிறது. இதைப் போன்ற பற்பல ப்ரமாணங்களும் இவ்வாறே இயம்புவதால், உலகங்கள் அனைத்திற்கும் காரணன் நாராயணனே எனத் தேறிற்று.

ஸித்தாந்தங்கள் அனைத்தும் நாராயணனையே ரக்ஷகன் எனக் கூறுகின்றன. அவன் ஸர்வக்ஞன், ஸர்வ சக்தன், ஸர்வ ஸ்வாமி, ஸ்வதந்த்ரன், காப்பாற்ற வேண்டுமென விருப்பமிருப்பினும் சக்தியில்லை எனில், எவ்வாறு காப்பது? உலகங்களிலே நடப்பவைகள் அனைத்தையும் அறிந்தவன். நாம் அவனுடைய ப்ரஜைகள், அவன் நமது ஸ்வாமி. இந்த ஸம்பந்தம் உள்ளதாலும், அவன் ஸ்வதந்த்ரனானதால் அவன் யாருக்கும் அஞ்சாது விரும்பியதை விரும்பியவாறு செய்ய முடியும். அவன் கருணைக் கடலானதால் நாம் அவனையடைந்தால் கருணையுடன் நம் துன்பத்தைத் துடைப்பன். அவன் சரணாகத வத்ஸலன், ஸத்ய

ஸங்கல்பன். எனவே சொன்ன சொல் தவறாது வாத்ஸல்ய மிகுதியால் காப்பான். நாம் ஓரடி முன் சென்றால் அவன் பத்தடி நம்மை நோக்கிக் காக்க வருவான்.

*****************************************************************

நாராயணன் திருநாமத்தை எப்பொழுதும் அனைவரும் கூறலாம் அதனால் கிடைக்கும் பயன்கள்:

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயின வெல்லாம் நிலந்தரம் செய்யும், நீள் விசும்பருளும், அருளொடு பெருநில மளிக்கும் வலம் தரும் மற்றும் ஆயின செய்யும் பெற்ற தாயின் ஆயன செய்யும் நலம்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமமே.

எனத் திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ளார். சரணாகதி செய்பவன் க்ருத க்ருத்யனாவான். (அவன் இப்பிணிப்பிலிருந்து விடுபடச் செய்ததைச் செய்தவனாவான்) இவன் இனி எம்பெருமானின் ஆக்ஞா அனுஜ்ஞா கைங்கர்யங்களை எம்பெருமானின் திருவுள்ள உகப்பையே பயனாகக் கொண்டு, தேஹாவஸானம் வரையில் செய்து வாழ வேண்டும்.

*****************************************************************

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்

ஶ்ரீ வைஷ்ணவர்களே! நாம் யார் ! நமது பிறவி எத்தகையது? நமது பேறு (பாக்யம்) யாது? நமது ஸித்தாந்தம் யாது? நமது ஸம்ப்ரதாயம் யாது? இவைகளின் பெருமை யாது? என்பது போன்றவைகளை நாம் உணர வேண்டாவா? இவைகளை உணராது ஶ்ரீ வைஷ்ணவர்கள் என்று கூறிக் கொள்வதில் பயனுண்டா? கட்டையாலான யானையைப் பெயரால் மட்டும் கூறலாகும்? அதனால் பயன் பெற இயலுமோ? அவ்வாறே ஶ்ரீ வைஷ்ணவன் என்று கூறிக்கொள்வதால் பயனேதும் பெறவியலாது. இக்குறையை அகற்றவே அவதரித்தவன் பேரருளாளன். நமது ஸித்தாந்தத்திற்கு அடிப்படையான கருத்துக்களைத் திருவாய் மொழித்தருளி அதனைப் பல க்ரந்தங்கள் வாயிலாக உணர்த்தி யாராலும் அசைக்க இயலாதவாறு நிலைநிறுத்த ஆசார்ய ஸார்வபௌமர்களைத் தந்தருளினான். அவர்களால் க்ரந்த மூலமாகவும் காலக்ஷேபங்களாலும் ஸாதித்துப்

பரப்பப் பெற்று பின் அவ்வாசார்ய ஸார்வபௌமர்கள் தோற்றுவித்த ஸிம்மாஸனாதிபதிகள் வாயிலாகப் பரவலாயிற்று நமது ஸித்தாந்தம்.
*******************************************************************

ஒழுக்க நெறிகள் -- ஸ்த்ரீ தர்மம்

எம்பெருமானால் படைக்கப் பெற்ற ஈரேழு பதிநான்கு உலகங்களில் இப் பூலோகமே மிகவும் சிறந்ததாம். ஸ்வர்க்காதி உலகங்களில் இன்பங்கள் கிடைக்கின்றன. அவைகளையடைவே அனைவரும் விரும்புகிறர்களே எனில் அது அறியாமையால் தான். இவ்வுலகில் நல்ல அறநெறிகள், தானம், தவம், ஆராதனம் போன்றவை பகவத் ப்ரீதிக்காகச் செய்தால் இம்மையிலும் அளவற்ற இன்பங்களை அடையலாம். ஏன் பரமபதத்தையும் அடையலாம். பேரானந்தமும் பெறலாம்.

இம்மாபெரும் பெருமைகட்கு நிலைக்களமான இந்நில வுலகிலே எண்ணற்ற பிறவிகட்குப்பின் பெற்ற இம்மானிடப் பிறவி பாழாகா வண்ணம் மேற்கூறிய செயல்களைச் செய்ய வேண்டும். அதற்குமுன் முதற்கண் சாஸ்த்ரங்களும் நீதி நூல்களும் கூறியவை களைக் கடைப் பிடிக்க வேண்டும். அவைகள் கூறியவைகளும் முதற்கண் கடைப் பிடிக்க வேண்டியதும் ஒழுக்கமாகும். இதனை "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்", "சீலம்பரம் பூஷணம்" என்ற முதுமொழிகள் விளக்குகின்றன. தோன்றும் போழுதே நல்ல, தீயவொழுக்கங்கள் ஏற்படுவதில்லை. பின்னரே குடும்ப ஊர் நகர நாட்டுச் சூழ்நிலைகளாலும் பழக்க வழக்கங்களாலும் தோன்றுகின்றன. அதிலும் குழந்தைகள் தாயுடனேயே முதற்கண் பழகுவதால் அவர்களுடைய நற்குண நற்பண்புகள் அவைகட்டு ஏற்படுகின்றன. பெண்கள் தங்களது கடாக்ஷ வீக்ஷணங்களால் நற்குண நற்பண்புகளாலும், எல்லாவித இன்னல்களையும் பொறுமையுடன் அகற்றும் ஆற்றலாலும், எவர் கோபித்தாலும் சிரித்த முகத்துடன் இனிமையாகப் பேசுவதாலும் கணவனையும், வீட்டிலுள்ளவர் களையும் நல்லொழுக்கமும், ஆசாரம், நற்செயல்கள், பகவதாராதனம், பாகவத ஸேவை போன்றவைகள் ஆன்மீகத் துறைகளில் ஈடுபாடு போன்றவைகளை உடையவர்களாகச் இயலும். எனவே ஆவதும் பெண்ணாலே என்றவாறு செய்ய இயலும். பெண்களிடம் இல்லையேல

அழிவதும் பெண்ணாலே என்றவாறு குடும்பம் சீர்கெடும். இதனால் ஊர், நகர், நாடு போன்றவைகளும் அழியும்.
**********************************************************************

குணம் : குணமென்னும் குன்றேறி நின்றார் என்றபடி, பெண் கட்குப் பொறுமை மிகமிகத் தேவை. கோபம் என்பதே உண்டாகக் கூடாது. இனிமையாகப் பேச வேண்டும். எப்பொழுதும் சிரித்த முகமாய் இருக்க வேண்டும். நல்ல ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும். மட்டு மரியாதையுடன் நடக்க வேண்டும். பெரியவர்கள் மாமனார் மாமியார் போன்றவர் மகிழுமாறு போற்றுமாறு நடக்க வேண்டும். அவர்கள் மகிழ மகிழக் குழந்தைகள் தீர்க்காயுள் உள்ளவராவர், செல்வம் பெருகும், வசதிகள் ஏற்படும். எனவே முழுமனத்துடன் பெரியவர்களைப் போற்றுக. இறைவன் இம்மைப் பயனை அளிக்க பித்ருக்கள் வாயிலாகவே அளிப்பன். பெற்றோர் மகிழ மகிழ இறைவன் மகிழ்வன். இறைவனின்றி ஒரு அணுவும் அசையாது. இவை யனத்தையும் மகளிர் மனதில் கொண்டு கடைப்பிடித்து இம்மை மறுமைப் பயனையும் பெறுவார்கள், ஆணிவேரான பெண்டிர். இவையனைத்தினையும் கடைப்பிடிக்க குடும்பத்தில் அனைவரும் நல்லொழுக்கம், அமைதி, இன்பம் பெற்று ஸகல ஸுகங்கள் பெற்று மகிழ்வர். இவ்வாறே ஊரும், நகரமும், நாடும் நலமுறும்.
**********************************************************************

நம்பி தோற்றம் :- பாதாளம் முதல் ஸத்யலோகம் வரையில் உள்ள உலகங்கள் அழியத் தக்கவைகளே. அவைகட்கு மேல் சுத்த ஸத்வமயமாக உள்ள உலகம் ஸ்ரீ வைகுண்டம், பரமபதம், கலங்காப் பெருநகர் என்று கூறப்படும். அவ்வண் நித்ய ஸூரிகட்கு நாதனாய் ப்ரகாசிக்கும் பரம புருடனாம் ஸ்ரீமந் நாராயணன் உலகனைத்திலும் செங்கோலோச்சும் தனியரசாய்த் திகழ்கின்றான். அவன் அவ்வண் அமர்ந்து நித்ய ஸூரிகளை மகிழ்விப்பதோடு மண்ணுலக மாந்தரையும் மகிழ்வித்தாட் கொள்ள மண்ணுலகம்புக்கு வளமான சோலைகள் புடைசூழ அழகும் மணமும் பெற்ற திருக்குறுங்குடி புக்கு அவ்வண் அர்ச்சா வடிவில் எழுந்தருளி பரிபூரண மனோரதனானான். எனவே நம்பி

எனத் திருப்பெயர் பெற்றான். அவனை ஸேவிப்பவர் நித்ய ஸூரிகள் போன்ற பெருமையுறுவர்.

இந் நம்பியே ப்ரபந்நஜன கூடஸ்தரான நம்மாழ்வாராக அவதரித்தார். திருமங்கை மன்னனுக்கு வீடுபேறு அளித்தவரும் நம்பியேயாவர். இவ்வாழ்வார் திருவரசு அவ்வண் காண்கின்றது. இங்கும் திருவாலியில் மட்டும் இவ்வாழ்வார் அஞ்சலி ஹஸ்தராய் ஸேவை சாதிக்கிறார்.

*****************************************************************

**ஸாளக்ராம லக்ஷணம்**

**ஸீதாராமர்** - மேகச்யாமள நிறமும், நீளமான உருவமும், இரு த்வாரங்களும் நான்கு சக்ரங்களும் பெற்றிருப்பர். மூன்று த்வாரங்களும், ஆறு சக்ரங்களும் பெற்ற மூர்த்திக்கு ஷட்சக்ர ஸீதாராமர் எனப்பெயர்.

**ஸந்தான க்ருஷ்ணன்** :- நீலமேக ச்யாமள நிறமும், அர்த்த சந்த்ரனைப் போன்ற த்வாரமும், உள்ளவர். உள்ளே ஒரு சக்ரம் இருந்தாலும் இல்லாவிடினும் இம் மூர்த்தியாம்.

**ஸ்ரீதத்வநிதி** :- அங்குசம் யோன்ற முகமும் வனமாலை அலங்காரமும், இரு பக்கங்களில் தடி கொம்பு போன்ற ரேகைகளும் முகத்தில் புல்லாங்குழல் போன்ற ரேகை காண்பதும் சந்தான க்ருஷ்ணன் என்று கூறுகின்றது.

**கோபால மூர்த்தி**:- முன் கூறிய நிறமும், முன் பக்கத்தில் மகர குண்டலமும், நெற்றியில் இடது பக்கத்தில் பாண ரேகையும், பிந்து, நாராசமும், புள்ளிகளுடன் பின் பக்கம் த்வாரமும் மிக அழகாகவும் இருக்கும்.

**ஸுதர்சனன் :**- உருண்டையாகவோ, நீண்ட உருண்டையாகவோ த்வாரத்தில் ஒரு சக்கரமும், சில புள்ளிகளும் பெற்றிருப்பர்.

*********************